Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (08 - 03 1991) வெள்ளிக்கிழமை ஓசை 18

## காங்கேசன் சீமெந்து ஆலை பொறியியலாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர்கள் பலர் நாட்டின் தென்பகுதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர் மேற்படி தொழிற்சாலை செயற்பட முடியாத நிலைமையைக் காரணம் காட்டி சிவில் மற்றும் மின்சாரப் பொறியிலாளர்கள் பலர் தற்காலிகமாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். இப்பொறியியலாளர்கள் காங்கேசன்துறைசீமெந்துஆலை மீண்டும்செயற்படத் தொடங்கும் பட்சத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தூங்கிக்கிடந்த பெண்ணினம்

# புரட்சிகர சக்தியாக இன்று எழுச்சி கண்டுள்ளது



## மகளிர் தினத்தை ஒட்டி தலைவர் பிரபாகரன்

"பழமை வாதத்திலும், மூட நம்பிக்கையிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகின்றது எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலம் தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன இந்த நிலையில் காலம் காலமாகக் தூங்கிப்போய்க் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டுநிற்கின்றது."

இவ்வாறு அனைத்துலக மகளிர் தினம் தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

இன்று அனைத்துலக மகளிர் தினம். முழு உலகமுமே இன்றைய தினத்தை பெண்ணினத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறது. யுகம் யுகமாக ஆணாதிக்க அடக்குமுறையின் கீழ் ஒடுக்கப்பட்டு வந்த பெண்குலம் சம உரிமைக்காக, சமத்துவத்திற்காக, சமூக நீதிக்காக குரலெழுப்பும் புரட்சிகர தினம் இது. பெண்விடுதலையின் வரலாற்றுத் தேவையையும் அவசியத்தையும் இன்றைய தினம் குறித்து நிற்கிறது.

இந்தப்பெண் எழுச்சி தினம் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!"

(2ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்பில்லாதோரை விடுவிக்க ஆலோசனை

(சென்னை)

தமிழகத்தில் அண்மைக் காலங்களில் கைதுசெய்யப்பட்ட தமிழ் அகதிகளில் எந்தப் போராளிக் குழுக்களுடனும் தொடர்பில்லாதவர்களை விடுதலை செய்வது பற்றி தமிழக அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

அகதிகள் மறுவாழ்வு ஆணையாளர் சி. என். ராமதாஸ் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் மகாநாட்டில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வர்த்தகர் இராணுவத்தால் கொலை

(வவுனியா)

வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா - கண்டிவீதியில் உள்ள ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸின் உரிமையாளரான மகேஸ்வரன் (வயது 50) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

## அம்பாறையில் மோதல்; புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மங்கள ஓயா 19 ஆம் கட்டை இராணுவத்தினர் மீது நேற்றுக்காலை 8 45 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இராணுவத்தினருக்குப் பலத்த சேதமேற்பட்டதாயினும் சேதவிபரம் முழுமையாகத் தெரியவரவில்லை விடுதலைப் புலிகளில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்பாராத மோதலில் ஒருபடை பலி; ஆயுதங்கள் மீட்ப

(திருமலை)

அல்லை கந்தளாய் சந்திக்கு அருகாமையில் சிறிலங்கா இராணுவத்தை எதிர்பாராதவிதத்தில் சந்தித்ததில் திடீர் சண்டை ஒன்று மூண்டது. இதில் ஒரு இராணுவம் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டது புலிகள்தரப்பில் எதுவித சேதமும் இல்லை எனத்தெரிய வருகிறது.

இந்த நேரடி மோதலில்

- ★ ரி-81 ரக துப்பாக்கி - 1
- ★ ரவைக்கூடுகள் - 4
- ★ ஜே ஆர் கைக்குண்டு - 1

ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## காரைநகரில் பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று மாலை மூன்று முப்பது மணியளவில் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். இந்த ஷெல் தாக்குதலில் பலர் படுகாயமுற்றனர்.

இந்த ஷெல் தாக்குதல் கிழவன் காடு, புதுரோட், கந்தசாமி கோவில் பகுதி நோக்கி நடாத்தப்பட்டது. கோவில் குருக்கள் உட்பட நால்வர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

(நமது நிருபர்)

பலாலியில் நேற்று நண்பகல் 11-15 மணிக்கு நடந்த மோதலில் வீரவேங்கைகளான காரவசிங்கம் (முருகேசு யோகராசா) இலக்சி, மௌனி (தம்பிராசா தங்கேஸ்வரன்) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

## ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

ஞாயிற்றுக்கிழமை நிகழவிருந்த இலக்கியப் பேரவையின் பரிசளிப்புவிழா, தற்போதைய நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு பின்போடப்படுவதாக, பேரவையினர் அறிவித்துள்ளனர்.

## யாழ். இந்துக் கல்லூரியில் நாளை பெண்கள் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் 'பெண்கள் மகாநாடு' நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது மேற்படி நிலையத்தின் இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்புரை, கருத்துரைகள், கலைநிகழ்ச்சி என்பனவும் நடைபெறவுள்ளன. அத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## அநீதிக்கு எதிராகப் போராட பெண்கள் முன்வர வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பிரதேசங்களில் சர்வதேச மகளிர் தினம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தன்னம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையங்களின் பட்டியல் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சையும் சொந்த இடங்களிலேயே நடத்துவதற்கான வகையில் பரீட்சை நிலையங்களின் பட்டியலும் மேற்பார்வையாளர்களின் பட்டியலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் விமானக் குண்டு வீச்சு

# இருவர் பலி; பலர் காயம் ஆலயமும் தரைமட்டமாகியது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் கொக்குவில் பகுதியில் இரு இடங்களில் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 3 30 மணியளவில் விமானப்படையின் இரு குண்டுவீச்சு விமானங்கள் தலையாளி ஞானவைரவர் கோவில் மீதும் அருகிலிருந்த குடியிருப்புகள் மீதும் குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் பொ. மெயிற்லன் (வயது 25) என்பவர் கொல்லப்பட்டார். ஆ. கணபதிப்பிள்ளை (வயது 65) என்பவர் காயமடைந்தார். வைரவர் கோவிலின் ஆதிமூலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### கொழும்பு ஸ்ருடியோ

புளொக் (Block) புகைப் படம் றபர் சீல், கலர்ப்படம், ஓவியம், பிறேம் போடுதல். கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிக் கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

(B-2090)

### பரஸ்கோ

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியம். நல்லூர் செல்வர் வீதியில் வீடு கட்டக் கூடிய 4 1/2 பரப்புக்காணியம் விற்பனைக்குண்டு லேத் மிசின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- பாஸ்கோ ஸ்தாபனம் முத்திரைச் சந்தை நல்லூர்.

(B-2097)

### தவறிவிட்டது

கைப்பை ஒன்று, பெறுமதி மிக்க பொருட்களுடன், கல்வியங்காட்டுக்கும் (புறொக்ரர் கனகரத்தினம் வீடு) நாயன் மார்கட்டுச் சந்திக்குமிடையில் (ஆடியபாதம் வீதிச் சந்திப்பு) 3 - 3 - 91, ஞாயிறு காலை தொலைந்துவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்கப்படுகிறார்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

322, செம்மணி வீதி, நாயன் மார்கட்டுச் சந்தி, நல்லூர்.

(R-1158)

### அதிஷ்டலாபச் சீட்டு

கடந்த வருடம் அரசியல் காவத்துறை விளையாட்டு கழகமைத்த நிதிக்காக அதிஷ்டம் பார்க்கவிருந்த அதிஷ்டலாபச் சீட்டு நாட்டு நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதிஷ்டம் பார்க்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(B 2114)


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப காலம்தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சி கொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும் போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசிய போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்றுதொட்டே உணர்ந்திருந்தோம்.

நாம் ஒடுக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் இனம். அந்நியரின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கியொடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவி வரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழமைவாதத்திலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில். நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலம்தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையை சிதைத்து வருகிறது.

எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்துவந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசிய போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி, போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூகமத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப்போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது; சீருடை தரித்து நிற்கிறது எதிரியை களத்தில் சந்தித்து நிற்கிறது.

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது.

வீரத்திலும் தியாகத்திலும் விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிருபித்துக்காட்டியுள்ளனர்.

ஒரு புதுமைப் பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது.

தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடரவேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரளவேண்டும் போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும் பெண் விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

நாம் ஒரு சாதாரண சூழலில் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்கிறோம். போராடினால்தான் எமக்கு வாழ்வுண்டு விடிவுண்டு, வருங்காலமுண்டு என்ற ஒரு நெருக்கடியான நிர்ப்பந்தத்திற்குள் வாழ்கிறோம். நம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது இந்த எதார்த்தமான வரலாற்று நிர்ப்பந்தத்திலிருந்து யாருமே தப்பிக்கொள்ளமுடியாது அப்படித் தப்பிக்கொள்ள முனைபவர்கள் தேசாபிமானம் கொண்டவர்கள் அல்லர்.

இன்றைய யுத்தத்தின் கொடுவாலைகள் எல்லோரையும் தீண்டி வருகிறது. ஆண் பெண் என்ற வேறுபாடின்றி. சாதி வர்க்க வேறுபாடின்றி சிறியோர் முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் தீண்டி வருகிறது இது எமது இனத்திற்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் யுத்தம் இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக்கொள்ளவும் முடியாது இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை.

நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒரு தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும் மலைபோல உறுதியுடன் நாம் ஒன்றுகுவிந்து நின்றால் எமமை எத்தகைய சக்தியாலும் அழித்துவிட முடியாது.

இந்த தேசிய ஒற்றுமையையும் இனஒருமைப்பாட்டையும் ஒரு வலுவான அத்திவாரத்தில் கட்டி எழுப்பவேண்டுமானால் எம்மத்தியில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். சமூக முரண்பாடுகள் நீக்கப்படட வேண்டும். சமூக அநீதிகள் அழிக்கப்பட வேண்டும். ஆண் – பெண் என்ற பாலியல் அடிப்படையில் தோற்றம் கொண்ட பாரபட்சங்கள் அகற்றப்பட வேண்டும்.

அனைத்து தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால் எமது விடுதலை இலட்சியம் வெற்றிபெறுவது நிச்சயம்.

சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக்கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண்கள் சம உரிமை பெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் சமத்துவமாக, கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்.

பெண்களின் எழுச்சி தினமாகிய இன்று உலகப் பெண் இனத்தின் உரிமைப் போராட்டங்களுக்கு எனது ஆதரவையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


### லொறிசேதம்

நேற்று முன்தினம் வல்லையில் ஹெலிகொப்ரர் கட்டத்தில் வீதியில்சென்று கொண்டிருந்த லொறிஒன்று சிறுசேதமடைந்தது அதற்குள் சென்றவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

(82)

### காணவில்லை

க லோஜினி

கனகரெட்ணம் லோஜினி என்னும் 13 வயதுச் சிறுமியை 23-2-91 தொடக்கம் காணவில்லை. இவர் கடைசியாக அணிந்த சட்டையின் நிறம் நாவல் நிறம்; காதில் தோடு இல்லை; இவரைக் காண்பவர்கள் 740, நாவலர் வீதி என்னும் முகவரிக்கு அல்லது ஈழநாதம் காரியாலயத்திற்கு ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

(R-1160)

## விசேட அறிவித்தல்

புளியங்பொக்கணை

நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப்

பொங்கல் விழா : 1991

ஆண்டாண்டு பங்குனி உத்தரத்தில் நடைபெறும் பொங்கல் விழா இம்முறை 1991 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 29.3.91 நடைபெறாது என்பதையும் இது தொடர்பாக எவரும் எவ்வித கருமையும் செய்ய அனுமதிக்கப்படவில்லையெனவும், நேர்த்திக்கடன் நிறைவு செய்வோர் வரும் வெள்ளிக்கிழமைகளில் கோயிலில் பூர்த்தி செய்யலாம். இவ்விழா நாட்டு நிலைமையைப் பொறுத்து பின்பு நடைபெறும் நாள் அறிவிக்கப்படும்.

| | |
|---|---|
| சொக்கலிங்கம் அமிர்தலிங்கம் (தலைவர்) மேலதிக அரசாங்க அதிபர், பரந்தன், கிளிநொச்சி. | எஸ். எஸ். சின்னத்தம்பி இணைக்காரியதரிசி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத் திருப்பணிச்சபை. |

(R- 1155)



## நினைவு தருகின்றோம்

### மார்ச் 8

1986 ஆம் ஆண்டு உலங்குவானூர்தியின் தாக்குதலினால் காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**கஜன்** (இ. கணேசகுமார் - அச்சுவேலி)

1987ஆம் ஆண்டு நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப். உத்தமன்** (பூதப்பிள்ளை சிவக்குமார் - ஏழாலை)

**கண்ணன்** (க. பாபு - பெரியபளை)

இதே ஆண்டு பருத்தித்துறையில் காவல் கடமையின் போது வீரமரணமடைந்த

**ஸ்ராலின்** (வி. சிவசங்கர் - வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மூத்த தலைமுறைகள்
தீர்க்க தரிசனமாய்
செயற்பட தவறியதால்
தோள்களில் சுமைகளுடன்
பிறப்பெடுத்த தலைமுறை
போரிட முடிவு செய்ததால்
களத்தினில் புகுந்தீர்!
காவியமாகி விட்டீர்!
கனவுகள் நனவாகும்வரை
கண்ணிமைக்கும் நேரம் தானும்
ஓய்வு உறக்கம் எமக்கேது?

– விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-2110)


### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையில் எதிர் வரும் 10 ஆம் திகதி காலை 9 மணியளவில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. சித்த மருத்துவ வைத்தியர்களும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். இன்றைய சூழ்நிலையில் சித்த மருத்துவர்களின் நிலை மற்றும் சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சி பற்றியும் ஆலோசனை கலக்கப்படும் என்று சித்த மருத்துவ மாணவர் மன்றச் செயலர் என். வர்ணகுலேந்திரனின் பத்திரிகைச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.


## தாதிப் பயிற்சி நெறி

## DIPLOMA IN NURSING

**விண்ணப்பத் திகதி 10-3-91 வரைநீடிக்கப்பட்டுள்ளது**

I ஒன்றரை வருடகால பயிற்சி நெறி
II சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
III அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்
IV. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

அதிபர்

சாயி மெடிக்கல் அக்கடமி

(பதிவு செய்யப்பட்டது)

இல: 6, பருத்தித்துறை வீதி,

(முதலாம் ஒழுங்கை. மக்ரவல்லி அருகில்)

யாழ்நகர்.

(B/ 2112)

## ✸ சிந்தனைக்கு ✸

நா தடுமாறுவதை விட - கால் தடுமாறுவது மேல்.

— ஸெனோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 08-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# எப்போதோ தெரிந்தது

சந்திரசேகரின் நான்கு மாதகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இம்முடிவு எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. ஆகையினால், ஆச்சரியப்படுவதற்கொன்றும் இல்லை. இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேவைக்காக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியினாலும் இந்திய ஜனாதிபதியும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினருமான வெங்கடராமன் அவர்களினாலும் ஆட்சியில் அமர்த்தப்பட்ட சந்திரசேகரின் ஆட்சி அவர்களின் தேவை முடிவுற்றதும், இவரது ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது என்பதே உண்மை.

சந்திரசேகர் ஆட்சியில் அமர்த்தப்பட்டபொழுது இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கை ஆட்சியிலிருந்து கவிழ்த்த மண்டல்கமிஷன் சிபார்சுகளை நிறைவேற்ற முற்பட்டமை, ராம ஜென்மபூமி-பாபர் மசூதிப் பிரச்சினை என்பனவற்றுடன் காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளும் இந்தியாவில் எரியும் பிரச்சினைகளாக இருந்தன. அந்நேரத்தில் ஆட்சியை ஏற்பதோ, அன்றி தேர்தலை நடத்துவதோ இந்திரா காங்கிரஸுக்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துவிடக் கூடியதாக இருந்தது. தேர்தல் நோக்கில் தாழ்த்தப்பட்ட மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் வாக்குகள் காங்கிரசுக்குத் தேவை. ஆனால் ஆட்சியில் பிராமணர்களினதும், உயர் வகுப்பாரதும் நலன்களையும் பாதுகாக்கும் இந்திரா காங்கிரஸ் சிக்கலான நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ராஜீவ் காந்தியினதும் கட்சியினதும் எதிர்காலம் பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இந்நிலையிலேயே சந்திரசேகர் ஆட்சியில் அமர்த்தப்பட்டார்.

அத்தோடு இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் சட்டசபைகளைக் கலைத்தல் அல்லது ஆட்சியிலிருக்கும் கட்சிக்குள் பிரிவினையை ஏற்படுத்தல் என்பதும் சந்திரசேகர் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் என இந்திரா காங்கிரசினால் சந்திரசேகருக்குத் தெரிவிக்கப்பட்டவையாகும்.

இதன் பிரகாரம், வி.பி.சிங் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் மண்டல் கமிஷன் சிபார்சுகள், பாபர் மசூதி-ராம ஜென்ம பூமி பிரச்சினைகள் ஓரளவு தணிக்கப்பட்டன. வி.பி.சிங் காலத்தில் பாபர் மசூதி-ராமஜென்ம பூமி ஒரு எரியும் பிரச்சினையாக மாறியமைக்கு வி.பி.சிங் கடைப்பிடித்த இப்பிரச்சினை தொடர்பான கொள்கை காரணமல்ல. மண்டல் கமிஷன் தொடர்பான வி.பி.சிங்கின் கொள்கையே இதற்குக் காரணமாகும். அடக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை இதுவரை ஆட்சியாளர்களாலும், அதிகார வர்க்கத்தினராக இருந்தவர்களினாலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதன் காரணத்தால் இப்பிரச்சினையின் நோக்கத் தலையிட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாமையினாலேயே பாபர் மசூதி-ராம ஜென்ம பூமி விவகாரத்திற்கு பிரச்சினை மாற்றப்பட்டது. வி.பி.சிங் பதவி விலகியதும் அப்போராட்டத்தின் தீவிரம் கைவிடப்பட்டதில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

சந்திரசேகர் அரசாங்கம் தனது கடைசித் துரும்பாக வைத்திருந்த சீட்டு தமிழ்நாட்டு சட்டசபை கலைப்புத்தான். அதுவும் நிறைவேறப்பட்டதும், இந்திரா காங்கிரஸ் தனது சுயரூபத்தைக் காட்ட முற்பட்டு விட்டது.

சந்திரசேகர், தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எவ்வாறு கருணாநிதியில் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தினாரோ, அதேபோன்று அர்த்தமற்ற ஒரு குற்றச்சாட்டால் சந்திரசேகர் இன்று துரத்தப்பட்டு விட்டார்.

வளைகுடாப் போரின்போது அமெரிக்க விமானங்களுக்கு எண்ணெய் நிரப்புதல், பட்ஜெட் விவகாரம் போன்று ஒன்றன் பின் ஒன்றாக நெருக்கடிகள் சந்திரசேகருக்கு இந்திரா காங்கிரசால் கொடுக்கப்பட்டது. இறுதியில், ராஜீவ் காந்தி வீட்டைப் பிகார் பொலிஸ் அதிகாரிகள் வேவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டுடன் பாராளுமன்றத்திற்குச் செல்லாமல் ஒதுங்கிக்கொள்வதாக இந்திரா காங்கிரஸ் அறிவித்தது.

நாம் சந்திரசேகருக்கு வழங்கி வந்த ஆதரவை நிறுத்தவில்லை. சந்திரசேகர் அவசரப்பட்டுவிட்டார் என்று ராஜீவ் காந்தி கூறலாம். இது ஒரு போக்கிரித்தனமானதும், கீழ்த்தரமான விவாதமுமாகும். பாராளுமன்றத்திலுள்ள ராஜீவ் காந்தியின் இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுதான சந்திரசேகரின் ஆட்சிக்குத் தேவைப்பட்டதே ஒழிய வீட்டில் இருக்கும் இந்திரா காங்கிரஸ்காரர்களினதோ, ராஜீவ் காந்தியின் ஆதரவோ சந்திரசேகருக்கு தேவையாக இருக்கவில்லை.

ராஜீவ் காந்தி போலியானதும், போக்கிரித்தனமானதுமான வாதங்களை விட்டுவிட்டு ஆட்சிக் கவிழ்ப்புகள் எமது கட்சிக்குப் புதியதல்ல. இம்முறை ஆட்சிக் கவிழ்ப்பிற்கு நாங்கள் ஒரு புது வழியைக் கண்டு பிடித்துள்ளோம் எனப் பெருமையாகக் கூறிக் கொண்டாலாவது உண்மையைச் சொல்கிறார் என மக்கள் பாராட்டுவார்கள்.

மார்ச் 8

# அனைத்துலகப்பெண்கள்நாள்

உலக மக்களில் அரைப்பங்கினரான பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளை குறிப்பிட்ட ஆட்சிதலை குறிப்பிட்ட வர்க்கமோ அல்லாது, உலகளாவிய அளவில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே ஆணாதிக்கச் சக்திகளால் கட்டமைத்து விடப்பட்டு வருகின்றன.

வர்க்க வேறுபாடுகளின்றி அனைத்துப் பகுதிப் பெண்களும் உலகில் பெண் அடக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். பண்டைக்காலத்தில் அரசகுலப் பெண்கள் கூட அடிமையான கட்டுக்காவல்களுக்குட்பட்டே வாழ்ந்து வந்தார்கள்.

பெண்கள் ஆண்களின் இச்சையைத் தணிக்கும் பதுமைகளாகவும், அடிமைப் பணியை செய்யும் வேலைக்காரிகளாகவும், ஆண்களுக்குப் பிள்ளை பெற்றுக் கொடுக்கும் இயந்திரங்களாகவும் கணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க சமுதாயங்களும், மதக்கோட்பாடுகளும் பெண்ணடிமைத் தனத்தின் காவலர்களாகத் தொடர்ந்து பல வேறு வடிவங்களில் நிலைநிறுத்தி வருகின்றன.

பெண்களுக்குச் சொத்துரிமை மறுப்பு, உழைக்கும் பெண்களுக்கான ஊதியத்தில் வேறுபாடு, வீட்டுவேலைப் பளு, அரசியலுரிமை மறுப்பு, கல்வி உரிமை மறுப்பு, ஆண்களுக்கு கீழ்ப்படிவு போன்ற பெண் அடக்குமுறைகள் உலகளாவிய அளவில் பெண்களைத் தளைப்பட்டு இறுக்கி வைத்திருக்கின்றன.

இந்நிலையில் பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து, பெண்களின் பொருளாதார, சமூக சமத்துவத்துக்காகப் போராடுவதை இலக்காகக் கொண்டு 18ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல பெண்கள் அமைப்புக்கள் முகிழ்த்தெழுந்தன.

மேலை நாட்டவர்களான புளோரா டிரைஸ்டன், மார்ட்டின் ஸ்ருவர்ட், களாரா செட்கின் போன்றவர்கள் 19ஆம் நூற்றாண்டில் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி பெண்ணுரிமைப் போராட்ட வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றார்கள்.

1910ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் நடைபெற்ற 2ஆவது அனைத்துலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில், ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கின் அம்மையாரின் கருத்துக்கமைய ஒவ்வோராண்டும் மார்ச் எட்டாம் நாளை அனைத்துலக பெண்கள் நாளாகக் கொண்டாடுவதென்று முடிவெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில், 1911ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 8ஆம் நாள் அனைத்துலக பெண்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1911 இல் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்ட அனைத்துலகப் பெண்கள் நாள் 1913 இலிருந்து ருஷ்யாவிலும் அதனைப் பின்பற்றியாக உலகின் ஏனைய நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆண் - பெண் சமத்துவம், பெண்களுக்கான அரசியல் சட்ட ரீதியான உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்பு, சம ஊதியம் போன்றவற்றை முன்வைத்து மேலைநாடுகளில் பெண்கள் பெரும் போராட்டங்களை நடத்தினர். பெண்கள் நடத்திய போராட்டத்தினால் இங்கிலாந்தில் 1918 இல் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 10 ஆண்டுகளின் பின்னர் ஆண்களைப் போன்றே 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் அங்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

இதுபோன்றே சிறுசிறு சீர்திருத்தங்களைப் பெற்ற போதிலும் ஆண்களுக்கு சமமான சமத்துவத்தை நிலைநாட்ட மேலைநாட்டுப் பெண்களால் முடியவில்லை. காரணம், உழைக்கும் பாட்டாளி வர்க்கப் பெண்கள், பெருமளவில் பெண்கள் அமைப்புகளில் சேர்ந்து களத்தில் இறங்காததேயாகும்.

அந்தநேரம், 1917 அக்டோபர் புரட்சியின்பின் மாமேதை லெனின் அவர்கள் பெண்ணடிமைத்தனத்தை நீக்கும் வகையில் சோவியத் நாட்டில் பல சட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தினார். வீட்டுவேலைப்பளுவில் அமிழ்ந்திருந்த உழைக்கும் பெண்



களை அந்த இடரிலிருந்து விடுவிக்க பெண்களின் வீட்டு வேலைகளை சமூகமயமாக்க திட்டங்கள் தீட்டினார். குழந்தைகள், காப்பகங்கள், பொதுச்சமையற் கூடங்கள், உணவு விடுதிகள் என்பவற்றை பெருமளவில் உருவாக்கினார். பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிகரான ஊதியங்கள், உழைக்கும் பெண்களுக்கு மகப்பேற்றுக் காலத்தில் ஊதியத்துடனான விடுப்பு, பெண்கள் பணியாற்றும் தொழிலகங்களில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றையும் ஏற்படுத்தினார். இன்று உலகளாவிய ரீதியில் சோவியத் நாட்டுப் பெண்களே உரிமைபெற்றவர்களாக, ஆணாதிக்கத்திலிருந்து பெருமளவு விடுதலை பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். 30 வீதத்துக்கும் அதிகமான பெண்கள் சோவியத் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியலிலும் பெரும் சக்தியாகத் திகழ்கிறார்கள்.

அதேநேரம், பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள் கொடூரமானவையாகவும், காட்டுமிராண்டித் தன்மானவையாகவுமே இருந்து வருகின்றன. தமது நாட்டின் சுதந்திரத்துக்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் பெருமளவில் கலந்துகொண்டு பெரும் இடர்களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டவர்கள் இந்தியப் பெண்கள். இருந்தும் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் பெண்கள் எதிர்நோக்கி வரும் இன்னல்களோ சொல்லுந்தரமன்று. சிறுவயதுத் திருமணம், சீதனம், உடன்கட்டை ஏறுதல், கைம்மை பேணுதல், மறுமண மறுப்பு, கல்வியில் புறக்கணிப்பு, பெண்சிசுக்கொலை போன்ற பெண்ணடக்குமுறைகளை இன்னும் இந்தியப் பெண்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழப் பெண்களைப் பொறுத்தவரை, பெண் சிசுக் கொலைகள், சீதனக் கொலைகள் உடன் கட்டை ஏறுதல், சிறு வயதுத் திருமணம் போன்ற இந்தியப் பெண்கள் சந்திக்கும் கொடுமைகளை எதிர்நோக்காத போதிலும் சீதனம், மறுமண மறுப்பு, மதக்கோட்பாடுகள், சடங்குகள், பாலியல் வன்முறைகள் போன்ற பெண்ணடக்குமுறைகளை எதிர்கொண்டே வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி, சிங்கள ஏகாதிபத்தியப்படைகள் தமிழீழப் பெண்கள் மீது நடத்தும் பாலியல் வன்முறைகள், அடக்குமுறைகளுடன், அவற்றை நடத்தும் சிங்களப் படைகளுக்குத் துணையாகச் செயற்படும் துரோகப்படைகளின் இழிசெயல்கள் என தமிழீழப் பெண்கள் இரட்டிப்பு அடக்குமுறைகளை இன்று தமிழீழத்தில் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதேநேரம், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்ட தமிழீழப்பெண்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தாம் பெறும் வெற்றிகளினூடே பெண்ணினத்துக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த உன்னத நிலையில் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதுவரை தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்து தமிழ் நிலத்தை ஆக்கிரமித்து, ஏராளமான தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுவந்த சிங்களப் படைகளை இன்று தமிழீழப் பெண்கள்-விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் விடுதலைப் போராட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டதன் மூலம் - நேரடியாகக் களத்தில் எதிர்கொண்டு தகுந்த பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

உலக அரங்கில் தமது ஆற்றல்களையும் தியாகங்களையும் வெளிப்படுத்தி ஆற்றல் மிக்க பெண்கள் படையாக மிளிர்ந்து வரும் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் அனைத்துலகப் பெண்கள் நாளான மார்ச் 8 ஆம் நாளை மகளிர் எழுச்சி நாளாக அறிவித்துள்ளனர்.

இதுவரை பெரும்பாலான நாடுகளில் மேற்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களாலும், பெண்ணை அடக்கி ஒடுக்கும் மேற்தட்டுவர்க்க சர்வாதிகார அரசியல்வாதிகளின் மனைவியராலும் சடங்கு போன்று நடாத்தப்பட்டு வந்த அனைத்துலகப் பெண்கள் நாளை விடுதலைப்புலிகளின் மகளிர் அணியினர் எழுச்சி நாளாக அறிவித்து கொண்டாடுவது சாலப் பொருத்தமானதாகவும், பொருளுள்ளதாகவும் அமைகின்றது.

அடக்கப்பட்ட பெண்களாக இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து புரட்சிகர சக்தியாக மாறி இன்று களத்தில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வரும் விடுதலைப் புலிகள் மகளிர் அணியில் தமிழீழப் பெண்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு உழைப்பதன் மூலமே தமிழீழ விடுதலைக்கு வழி சமைப்பதுடன் பெண்களுக்கெதிரான சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிய முடியும்.

## பெண்மணி படு காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் இரு சக்கர உழவு இயந்திரமும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் பெண்மணி ஒருவர் படு காயமடைந்தார்.

தங்கராசா லக்சுமி (வயது 36) என்ற இந்தப் பெண்மணி யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஜோ)

தேர்தல் பிரகடனம் வெளியிடுமாறு எதிர்க்கட்சிகள்

# வெங்கட்ராமனை நிர்ப்பந்திப்பதாக ராஜீவ் காந்தி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

விரைவில் பொதுத்தேர்தலை நடத்தும்பிரகடனத்தை விடுக்குமாறு எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி வெங்கட்ராமனை நிர்ப்பந்திப்பதாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இடைக்காலநிதி ஒதுக்கீட்டு மதிப்பீட்டைப் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் நிபந்தனை விதித்துள்ளன; சபாநாயகர் ரவிராயை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆட்சி அமைப்பதற்கோ, கலைந்த அரசை நிர்வகிப்பதற்கோ இந்திரா காங்கிரஸ் கட்சியை ஜனாதிபதி அழைக்கக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையில் எதிர்க்கட்சி எம்.பிகள் சிலரின் ஆதரவுடன் ராஜீவ் காந்தி ஆட்சி அமைக்க முற்பட்டிருப்பதாக புதுடில்லியிலிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

## வளைகுடா யுத்தச் செலவு 7000கோடி அமெரிக்க டாலர்

(வாஷிங்டன்)

வளைகுடா யுத்தத்தினால் ஏற்பட்ட செலவு ஏழாயிரம் கோடி டொலர்களாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் அமெரிக்கா 1500 கோடி டொலர்களைக் கொடுக்கும் என்று வெள்ளைமாளிகைவரவு செலவுத் திட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பஸ்ரா உட்பட தெற்கு ஈராக்கிய நகர்கள்

## குடியரசுக் காவற்படைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன

(வாஷிங்டன்)

ஈராக்கின் துறைமுக நகரமான பஸ்ராவில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை குடியரசுக் காவல்படை அடக்கிவிட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கலவரம்நடைபெற்ற ஈராக்கின் தென்பகுதி நகரங்களை அரசபடைகள் கட்டுப்படுத்தி வருகின்றது என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

முன்னதாக ஈராக்கில் பல்வேறு நகரங்களிலும் அரச எதிர்ப்புக் கலவரங்கள் நடைபெறுவதாக கூறியதும் அமெரிக்காவே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

சென்ற வாரம் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நாளை ஒன்பதாந் திகதி சனி கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா தலைமையில் நடைபெற உள்ளது. தொடர்ந்து போட்டியில் முதலிடம்பெற்ற நிகழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறஉள்ளன (1)

## 5 பாலஸ்தீனிய போராளிகள் கொலை

(டெல்அவீவ்)

தெற்கு லெபனானின் இஸ்ரேலிய ஆதரவுடனான மக்கள் படையினருடன் நடந்த மோதல் ஒன்றில் ஐந்து பாலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய எல்லையில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் அமைந்த கிராமமொன்றில்இம் மோதல் இடம்பெற்றதாய் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழ்ப்பாடசாலை கூரைத்தகடுகளை ராணுவம் கழற்றிச் சென்றது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள சுங்கன்புரி, பச்சனூர் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளின் கூரைகளை சிங்கள இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து கழற்றி கிண்ணியாவுக்கு கொண்டுசென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த நாலைந்து தினங்களில் இடம்பெற்றது.

### தொடர்பில்லை தோரை

இதுவரை 1875 அகதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். அகதிகள் விரும்பினால் மீண்டும் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லலாம் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது ஒருஇலட்சத்து இருபத்திரண்டாயிரத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர். இவர்களைப் பராமரிப்பதற்கென அரசாங்கம் இதுவரை 18 1/2 கோடிரூபா செலவிட்டுள்ளது என்றும், இதில்15 கோடிரூபாவை மத்தியஅரசாங்கம் அளித்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

### காங்கேசன்

காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது

## உலர் உணவு அட்டைகள் மீள் பரிசீலனை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களுக்கான உலர் உணவு விநியோக அட்டைகள் தொடர்பான மீள் பரிசீலனை நடைபெறுகின்ற போதிலும் உணவு விநியோகத்தின் அடுத்த கட்டம் சில தினங்களில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மேற்படி உணவு விநியோகத்திற்கு தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருப்பதாகவும் தற்போது யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட குடிவரவு, குடியகல்வு, இடம்பெயர்வு மற்றும் சனத்தொகையில் ஏற்பட்ட மாற்றம் போன்றவற்றால் ஏற்படும் மாற்றங்களை சீர்செய்வதற்காக மேற்கொள்ளப் பட்டு வரும் மீள்பரிசீலனை நடவடிக்கைகள் தொடர்கின்ற அதேவேளை உணவு விநியோகமும் சீராக மேற்கொள்ளப்படும் என்று செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

### காரைநகரில்

வரி. ச. கனகம்மா (வயது 65) த. சிவசௌரி (வயது 16), எஸ் சண்முகரட்ணம் (வயது 45 ஆகியோருடன் எஸ். பி. ஆறுமுகக் குருக்கள் என்ற பூசகரும் படுகாயமுற்றார். (லோ


## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் நடராசா

(இளைப்பாறிய அதிபர்)

புங்குடுதீவு திரு. நா. நடராசா அவர்கள் 06-03-1991 இல் காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய அதிபர் திருமதி சிவபாக்கியம் நடராசா (நயினாதீவு) அவர்களின் அன்புத் துணைவரும், டாக்டர் சுசீலா (கனடா), சுலோசனா பி. ஏ (நெடுந்தீவு மகாவித்தியாலயம்), சுகுமார் - கட்டிடப் பொறியியலாளர். (கனடா), சுரேஸ்குமார் (ஜேர்மனி), சுதாகரன் (லண்டன்), சுமங்கலா (இராமநாதன் பல்கலைக்கழக இறுதிவருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாபதிசிவம் (கனடா). ஞானசந்திரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா (கனடா)வின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 09-03-1991 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, மணற்காடு மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா. சதானந்தன் (மைத்துனர்)
கணக்குப் பரீட்சகர்,
கணக்காய்வு உப அலுவலகம்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

"சிவபதி"
3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(R1159)


### யாழ் இந்துக

டன் நாளை காலை 9-00 மணிக்கு பொருட்காட்சியும் விற்பனையும் ஆரம்பமாகி மாலை 4-30 மணிவரை நடைபெறும்.


### அம்பாறையில

இராணுவத்திடமிருந்து

- ★ ரீ 56 ரகத் துப்பாக்கி-01
- ★ ரீ 56 - 2 ரகத் துப்பாக்கி - 01
- ★ ரவைக் கூடுகள் - 05
- ★ ரவைகள் - 111

ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதென கூறப்பட்டது.

இதேவேளை அம்பாறையில் விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரை வழிமடக்கித் தாக்கி மூன்று இராணுவத்தைக் கொன்றதாகவும், இருவரைக் காயப்படுத்தியதாகவும் சிறிலங்கா பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.




## இராணுவ காவலரண்மீது விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் நேற்று கடுமையான மோதல் இடம் பெற்றது.

காலை ஆறுமுப்பது மணியளவில் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் காவலரண் ஒன்றை நோக்கி சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் தெரியவரவில்லை.

தொடர்ந்து காலை ஒன்பது மணி முப்பது நிமிடமளவில் இயக்கச்சிப்பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதலும் 50 கலிபர் தாக்குதல்களும் சரமாரியாக நடாத்தப்பட்டன.

இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து நான்கு ஹெலிக்கொப்ரர்கள் மூன்று பொம்மர்கள் ஆகியவற்றின் உதவியுடன் முகாமைவிட்டு இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது புலிகள் கடுமையாக எதிர்த்தாக்குதல் நடாத்தினர் இதனால் படையினர் மீண்டும் முகாமிற்குள் சென்றுவிட்டனர்.

இந்த தாக்குதலில் விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டு ஒன்று இராணுவத்தின் காவல் அரண்மீது விழுந்தது. காவலரண் முற்றாக சேதமடைந்தது.

## கருத்துரைகளும கலைநிகழ்ச்சியும்

சர்வதேச பெண்கள் தினம் தொடர்பான கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இன்று பி.ப. 3-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மாணவர் ஒன்றியம் செய்துள்ளது.

## தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது சகல தனியார் கல்வி நிறுவனங்களும் வழமை போல் இயங்குவதாகத்தெரிய வருகின்றது.

### பரீட்சை

இந்த பட்டியல்களை எடுத்துக்கொண்டு கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் உயர்தரப் பரீட்சை நடத்துவதற்கு முன்பாகவே சாதாரணதர பரீட்சையை நடாத்தி முடிப்பதற்கான அனுமதியை பெறுவரும்படியும் தாம் அந்த அதிகாரியிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக பணிப்பாளர் சொன்னார். (வே)

### அநீதிக்கு

பிக்கையோடு, தலைநிமிர்ந்து தமக்கு இழைக்கப்படும் சமூக அநீதிகளுக்கெதிராகவும், மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் போராட பெண்கள் முன்வர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

புத்தூர் மேற்கு சி. தர்மசேகரம் எனபவரால் கொப்பிகள் அடங்கிய பார்சல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி 'ஈழநாதம்' காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

### இருவர்

கட்டடத்திற்கு பின்பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டு ஒன்றினால் ஆலயத்தின் சுற்றுப்புறத்தில் இருந்த சந்தான கோபாலர் ஆலயம் தரைமட்டமானது. மேலும்ஆலயத்தின் பிள்ளையார் கோவிலும் ஆதிமூலக் கட்டடமும் பலத்தசேதமடைந்தன. ஆலயத்தின் அருகில் இருந்த கல்வி நிலையம் ஒன்றும், ஒருமில்லும், நான்கு வீடுகளும் பலத்த சேதமடைந்தன

கொக்குவில் மேற்குப் பகுதியில்இடம்பெற்றகுண்டுத்தாக்குதலில் த. தேவநாயகி வயது 87 என்பவர் கொல்லப்பட்டார். எஸ். மங்கையர்க்கரசி (வயது 35), இவரது மகன் சந்திரமோகன் என்பவரும் ஆர் மனோஜா (வயது 16), புஸ்பவதி வயது 28), யோகேஸ்வரன் (வயது 19), இராசமணி (வயது 35), பரமலிங்கம் (வயது 42), எஸ். பரமேஸ்வரி (வயது 47), செல்வநாயகம் ஜனார்த்தனன் (வயது 2) ஆகியோர் காயமடைந்தனர். இப்பகுதியில் இருந்த பொதுமக்களின் ஆறு குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்தன.

(க. 85, செ. த. மை)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.